மதுரை மாநகரில் ஜூன் 1 அன்று நடைபெற்ற பொதுக்குழுவில் தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க கழகத் தலைவரால் எடுக்கப்பட்ட சிறப்பு தீர்மானமான ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணிகளுக்காக எழும்பூர் தெற்கு பகுதி 58,58அ ஆகிய வட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம். 17.7.2025 மாலை 6,00, மணியளவில் சென்னை, கூளை, ராட்லர் தெரு எஸ்.ஆர்.மகாலில் நடைபெற்ற கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான பி.கே.சேகர்பாபு ஆலோசனைகள் வழங்கினார். இக் கூட்டத்தில் எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், தொகுதி பார்வையாளர் பி.எம்.யாழினி, தமிழன் பிரசன்னா, கே.எஸ்.ரவிச்சந்திரன், கே.எஸ்.எம்.நாதன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., வட்டக் கழக செயலாளர் வி.விஜயகுமார், ஆர்.பாபு, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வெற்றி மற்றும் பி.எல்.ஏ. 2, பி.டி.ஏ, பி.ஒய்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலந்தூர் காந்தி மார்க்கெட்டில் இருந்து பல்லாவரம் ரயில் நிலையம் வரை புதிய சிற்றுந்து சேவையை அமைச்சர் தா.மோ.அன்பரசன் இயக்கி வைத்தார். அருகில் மண்டலக்குழு தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.டி.பூபாலன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர் கே.பி. முரளிகிருஷ்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னைத் தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நாளை (19.07.2025 - சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில், பஜார் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி மற்றும் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: கழக ஆக்க பணிகள்

அமைச்சர் மா.சுப்பிரமணியன்,
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

கடலூர் கிழக்கு மாவட்டம் –

குறிஞ்சிப்பாடி அருகே காலணித் தொழில் பூங்கா அறிவிப்பு வெளியிட்ட முதலமைச்சருக்கு நன்றி!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், ஜூலை 18-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம்,17.07.2025, வியாழக் கிழமை, மாலை 4 மணியளவில், காணொளி காட்சி மூலமாக, கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர்கள் ஏ.அங்கையற்கன்னி, விஜயன்ராமகிருஷ்ணன், சுவை.சுரேஷ், எம்.எம்.சிவா, அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமன எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், 14-07-2025 மற்றும் 15-07-2025 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் கலந்துக் கொண்டு, ஐயா எல்.இளையபெருமாள் நாற்றாண்டு அரங்கம் மற்றும் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில்

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தனை துவக்கி வைத்ததற்கும், கடலூர் மாவடம் குறிஞ்சிப்பாடி அருகே கொடுக்கன்பாளையத்தில் 150 ஏக்கர் பரப்பில் தோல் அல்லாத காலணி மற்றும் காலணிகளுக்கான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற் பூங்கா, ஸ்ரீமுஷ்ணம் காவிரி டெல்டா பகுதியாக அறிவிக்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களுக்கு கடலூர.கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் 5 சட்டமன்ற தொகுதி, 1284 பூத்களில் ஓரணியில் தமிழ்நாடு என்ற கழக தலைவர் அவர்களின் அறிவிப்பினை அமல்படுத்தும் விதமாக இல்லங்கள்தோறும் கழக நிர்வாகிகள் சென்று பொதுமக்களை சந்தித்து, கழகத்தில் 60 சதவீதம் புதிய உறுப்பினர்களை, கூடுதல் வேகத்துடன் சேர்த்திடல் வேண்டும். கடலீர் கிழக்கு மாவட்டத்தில் 430-ககும் மேற்பட்ட இடங்களில் உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சியில் கலந்துக் கொள்ளும் பொதுமக்களுக்கு கழக நிர்வாகிகள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி உதவிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆர்.சக்திவேல், சுதா சம்பத், ஒன்றிய செயலாளர்கள்: அ.முத்துசாமி, வி.சிவக்குமார், தங்க.ஆனந்தன், ஆர்.நாராயணசாமி, கே.ஆர்.ராயர், பா.திருமாவளவன், பி.சுந்தரபாண்டியன், தெ.காசிராஜன், பி.சுப்பிரமணியன், ஆர்.விஜயசுந்தரம், த.சங்கர்,ம.சோழன், வி.கோவிந்தசாமி, கே.நடராஜன், எம்.மனோகரன், ஏ.எஸ்.மதியழகன், டி.திருமூர்த்தி, எஸ்.செந்தில்குமார், கே.ஆர்.கோவிந்தராஜ், ஆர்.ராஜேந்திரன், ஏ.எம்.மதியழகன், வெற்றிவேலு, வி.பி.பாலு, கே.ஆர்.தனஞ்செயன், கே.மகேஷ், த.ஜெயபாண்டியன், கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, நகர கழக செயலாளர்கள் கே.ஆர்.செந்தில்குமார், த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள்- வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜய ராகவன், இரா.தமிழரசன், ச.கல்யாணசுந்த ரம், என்.டி.கணேசன், மஞ்சு, பா.கோதண்ட பாணி, பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.க ணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப.ஜெய்சங்கர், சேத்தியா தோப்பு ப. மனோகரன், திருமுட்டம் பூ.செல்வகுமார், சேத்தியா தோப்பு ப.மனோகரன், அண்ணாமலை நகர் க.பழனி, மாவட்ட கழக பார்வையாளர்கள் டி.பழனிசாமி, ஜி.சின்னமணி,பி.வெங்கடாஜலபதி, மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞரணி ஜி.கார்த்திகேயன், மாணவரணி அப்பு ஆர்.சந்தியநாராயணன், பொறியாளர் அணி அப்பு.சந்திரசேகரன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மகளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி, ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி.அருள் ஜோதி, மாநகர வழக்கறிஞர் அணி பாபு, ஆதிதிராவிடர் நல்லக்குழு ஆர்.பரந்தாமன், இலக்கிய அணி வி.சி.சண்முகம், சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு எம்.எஸ்.முகமது யூனூஸ், வர்த்தக ரணி ஆர்.ரெங்கநாதன், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி வாசு, இலக்கிய அணி பழனிசாமி, டி.வெங்கடாஜலபதி, கலை இலக்கிய பிரிவு, ஜி.சின்னமணி, இளைஞரணி துணை அமைப்பாளர் மணிகண்ணன், முத்துகுமார், குட்டிமணி, பிரபு, தகவல் தொழில்நுட்ப அணி அ.முத்தமிழ்செல்வன், வி.எம்.வெற்றிசெல்வன், ப.பிரவின்குமார் , உமாபாலன் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் இடி மின்னலுடன் கூடிய மழை!

சென்னை, ஜூலை 18-

தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும் மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் தமிழகத்தில் 28 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதன்படி திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், விழுப்புரம், திருவண்ணாமலை, மதுரை, சிவகங்கை, நீலகிரி, கோயம்புத்தூர், தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மிதமான இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடலூர், கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், அரியலூர், சேலம், நாமக்கல், கரூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் லேசான இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்றத் தொகுதி சிவகணபதி நகருக்கு உட்பட்ட ராகவேந்திரா நகரில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் ரூ. 9 லட்சத்து 93 ஆயிரம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி நடந்தது. இதில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா கலந்து கொண்டு, சாலை அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

அதிகார எல்லையை மீறுபவர்தான் ஆளுநரா?

தமிழ் மொழி, தமிழர் பண்பாட்டின் மீது ஆளுநரால் நிகழ்த்தப்படும் தொடர் தாக்குதல்கள்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 18 -

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.இரவி அறிவித்த விருது கேடயத்தில் மோசடித் திருக்குறள் அச்சடிக்கப்பட்டிருப்பது தமிழ் மொழி, தமிழர் பண்பாட்டின் மீது ஆளுநரால் நிகழ்த்தப்படும் தொடர் தாக்குதல்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

கடந்த 13 ஆம் தேதி சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில், ஆளுநர் ஆர்.என்.இரவி பங்கேற்று மருத்துவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி ஒன்றை நடத்தி இருக்கிறார்கள். அதில் பாராட்டி வழங்கப்பட்ட கேடயத்தில் 944 ஆவது திருக்குறள் என்று ஒன்றைப் பதித்திருக்கிறார்கள்.

"செருக்கறிந்து சீர்மை பயக்கும் மருப்பொடு
மன்னுஞ்சொல் மேல்வையப் பட்டு"
திருவள்ளுவர் (திருக்குறள் 944)

இப்படி ஒரு திருக்குறளை இதுவரை எவரும் கேட்டதும் இல்லை; படித்ததும் இல்லை. ஏனென்றால் 1330 குறள்களில் இப்படி ஒரு திருக்குறளே இல்லை.

இரண்டு குறள்கள்தான்!

'செரு' என்ற வார்த்தையில் தொடங்கப்படும் இரண்டு குறள்கள்தான் இருக்கின்றன.

ஒன்று,

"செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்." (குறள் 569)

இரண்டாவது,

"செருக்குஞ் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமிதநீர்த்து.' (குறள் 431)

மருந்து என்ற அதிகாரத்தில் உள்ள குறள் எண் 944 இல் உள்ள உண்மையான குறள் பின்வருமாறு:

"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து." (குறள் 944)

குறள் எண்களில், எழுத்துகளில்பிழையிருப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், இல்லாத ஒன்றை உருவாக்கி அதைத் திருவள்ளுவர் தலையில் கட்டும் மோசடியை இதுவரை எங்கும் யாரும் கண்டதில்லை.

இதுகுறித்து மேனாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் ட்விட்டர் மூலம் கேள்வி எழுப்பி உள்ளார். பல்வேறு தரப்பினரும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.

தொடரும் ஆளுநர் ஆர்.என்.இரவியின் அடுத்த மோசடியா இது?

திருவள்ளுவரின் உருவம் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படம் என்று 60 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்பட்டு வரும் படத்தை மாற்றி, போலியாக உள்நோக்கத்துடன் திருவள்ளுவருக்குக் காஷாயம் காவி ஆடை, பட்டை, கொட்டை அணிவித்து, காவித் திருவள்ளுவர் ஆக்கிய காவிக் கும்பலின் படத்தைப் பயன்படுத்துவது, 'திருவள்ளுவர் திருநாள்' என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நாளுக்கு மாற்றாக வேறொரு நாளை முன்னிறுத்துவது என்று தொடரும் ஆளுநர் ஆர்.என்.இரவியின் அடுத்த மோசடியா இது?

நாடெங்கும் திருக்குறள், வீடுகள் தோறும் இருக்கும் போது, இணைய வெளியில் ஏராளமான தளங்களில் தட்டிய உடனே திருக்குறள் கிடைக்கும் போது, இவ்வளவு விழிப்போடு இருக்கும் காலகட்டத்திலேயே தமிழர்கள் அனைவரும் அறிந்த திருக்குறளில் இப்படி ஒரு மோசடி நிகழ்த்தப்படுகிறது என்றால், காலங்காலமாக எத்தனை இடைச்செருகல்களை இவர்கள் பகவத் கீதையிலும் இன்னபிற வேத, புராண, இதிகாசங்களிலும், வரலாற்றிலும் செய்திருப்பார்கள் என்பதற்கு இதுவே சான்று அல்லவா?

குறைந்தபட்சம் ஆளுநர் பொறுப்பேற்க வேண்டாமா?

பல இடங்களில் இருந்தும் கண்டனங்கள் எழுந்ததற்குப் பிறகு, ஆளுநருக்கும், இந்த மோசடிக் குறளுக்கும் தொடர்பில்லை என்று இப்போது அறிக்கை வெளியிடுகிறார்கள். நாட்டில் எந்த மூலையில் ஏதோ ஒரு சிறு நிகழ்வு நடந்தாலும் முதலமைச்சர் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறுபவர்கள், ஆளுநர் மாளிகைக்குள்ளேயே அவர் நடத்திய நிகழ்வில் அவர் வழங்கிய விருதில் பொறிக்கப்பட்டுள்ள திருக்குறள் தவறானது என்றால் அதற்கு குறைந்தபட்சம் ஆளுநர் பொறுப்பேற்க வேண்டாமா?

"அவர் திருக்குறளின் மீது திடீர் குபீர் ஆர்வம் கொண்டவர் தமிழைக் கூர்ந்து, ஆழ்ந்து, விரும்பித் தெரிந்து கொள்கிறார்" என்றெல்லாம் அவ்வப்போது செய்தி வெளியிடுகிறார்கள்! இல்லாத திருக்குறளை மோசடியாக உருவாக்கி விருதுக் கேடயமாக வழங்குவதை ஆளுநர் அறிய மாட்டாரா?

ஆளுநர் ஆர்.என்.இரவி மற்றும் அவரது அதிகார பீடத்தில் இருந்து செய்யப்படும் இத்தகைய மோசடிகளுக்கு நமது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முன்பு, ஆளுநர் மாளிகை நடத்தும் பொங்கல் விழாவுக்கான அழைப்பிதழில் 'தமிழ்நாடு ஆளுநர்' என்று அதுவரை அச்சடிக்கப்பட்டு இருந்த நிலையில், 'தமிழக ஆளுநர்' என்று வேண்டுமென்றே மாற்றியது இவர்தானே? தமிழ்நாடு என்று அரசமைப்புச் சட்டப்படி ஏற்கப்பட்டுள்ள ஒரு மாநிலத்தின் பெயரை மாற்றுகிற அதிகாரம் இவருக்கு எங்கிருந்து முளைத்தது?

தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த உணர்வு

தெரியாமல் அல்ல... தெரிந்தே தொடர்ந்து இத்தகைய மோசடிகளும், அதிகார அத்துமீறல்களும், வீண் வம்புச் சண்டைகளும் ஆளுநர் மாளிகையின் போக்காக இருக்கின்றன. அரசமைப்புச் சட்ட ரீதியாக செய்ய வேண்டிய கடமைகளை உரிய காலத்தில் செய்வதை விட்டு விட்டு, தன் அதிகார எல்லைக்கு மீறிய செயல்களை மிகுந்த ஆர்வத்தோடும், அதைவிட அதிகமான உள்நோக்கத்தோடும் தனியான அதிகார மய்யம் போல தன்னைக் காட்டிக் கொள்வதற்காக செய்து கொண்டிருக்கிறார்கள். பட்டியலிட்டால் நீண்டு கொண்டே செல்லும். அதை இனியும் நீள விடக்கூடாது என்பதே தமிழ் நாட்டு மக்களின் ஒட்டு மொத்த உணர்வாகும்.

இவ்வாறு கி.வீரமணி அறிக்கை விடுத்துள்ளார்.

விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் வானூர் சட்டமன்ற தொகுதி, வானூர் மத்திய ஒன்றியம், வானூர், நைனார் பாளையம் ஆகிய பகுதியில் 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர் சேர்க்கை பரப்புரைக்கான களப்பணியை பூத் எண்: 138, 139, 140, 141, 142, 143 ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு, வாக்குச்சாவடி முகவர்களுடன் கலந்துரையாடினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர் மைதிலி ராஜேந்திரன், மு.சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர் வி.எம்.ஆர்.சிவா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அன்பரசு, மாவட்ட துணை அமைப்பாளர் புஷ்பராஜ், ஒன்றிய நிர்வாகிகள் சங்கர், ராஜவேல், நெடுஞ்செழியன், சிவதாசன், வெங்கடேசன், வீரமணிகண்டன், ஒன்றிய கவுன்சிலர் சசிகுமார், பி.எல்.ஏ.2 & பி.டி.ஏ., கிளை நிர்வாகிகள் பசுபதி, சுப்ரமணியன், சதாசிவம், வினோத்குமார், பெருமாள், கார்த்திகேயன், சுந்தர மூர்த்தி, பசுபதி, ராஜவேல், சுதா, ராஜேந்திரன், சுமதி, பூபாலன், ஏழுமலை, லட்சுமி காந்தன், மூவேந்தன், மனோன்மணி, செங்குட்டுவன், பிரகாஷ், தினேஷ், அம்பிகா, அழகுவேல், வீரராகவன், சுந்தரபாண்டியன், வேலு, ஜெயகோபாலன், சுகந்தி, செங்குட்டுவன், பாபு, சந்தானம், கண்ணகி, ஆனந்தபாபு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.